# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.112/2024

dated : 14.11.2025

P.W. 2

Name குணசேகரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. வாதி பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குரைச் சொத்துக்கள் பற்றிய விவரங்கள் முழுமையாக தெரியாது. வாதி அவருடைய கணவரைவிட்டு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு பிரிந்து தனியே வசித்து வருகிறார். வாதி அதன்பின்னர் அவரது பெற்றோர் பாதுகாப்பில் வசித்து வந்தார். சுப்பிரமணியனுக்கு 6 மக்கள். 4 ம் பிரதிவாதி தவிர மற்றவர்கள் அருகருகே வசித்து வருகிறார்கள் ஒருவர் இறந்துபோனார். நான் வார்டு உறுப்பினராக இருந்தேன். எனவே அப்பகுதி மக்களை ஓரளவிற்கு தெரியும். 10, 11 பிரதிவாதிகள் அங்கே வீடு கட்டி வசித்து வருகிற விவரம் எனக்கு தெரியும். கணவரைப் பிரிந்து வந்தபின்னர் வாதிக்கு வருமானம் ஏதும் இல்லை 2017 வரை பெற்றோருடன் வசித்து வந்தார். வாதி வசிக்கும் வீடு வாதிக்கு சொந்தமானதாகும். அந்த வீட்டை 5 வருடங்களுக்கு முன்பு வாங்கினார். வாதியின் தந்தை கொடுத்த பணத்தைக் கொண்டு வாங்கினார் என்றால் சரியல்ல. வாதியின் பெற்றோர் உயிருடன்

இருந்தபோதே அவருக்கு தேவையான பராமரிப்புத் தொகை, பணம், பொருட்கள் கொடுத்துள்ளார்கள் என்றும் அதனை கொண்டே வாதி வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலம் தயாரிக்க நான்தான் தகவல் சொன்னேன். சுப்பிரமணியன் எனக்கு பெரியப்பா அதனால் அடிக்கடி நான் வீட்டிற்கு செல்வேன் உடல்நலம் சரியில்லாமல் இருந்தபோது மூன்று வேளையும் செல்வேன் அதனால் அவர் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்று தெரிந்து கொண்டேன். சுப்பிரமணி உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு அவர் எழுதி வைத்த உயில் ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்றும் அந்த விவரங்களை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றும் தற்போது தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 6 ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உயில் பற்றிய சங்கதிகள் என்பதால் எனக்கு முன்னதாகவே உயில் பற்றிய விவரம் தெரியும் என்றும் அதனால்தான் மேற்படி விவரங்களை முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் ஆவணத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. வாதி வைத்திருந்த உயில் ஆவணத்தை பார்த்தேன் படித்து பார்க்கவில்லை. ஓரளவிற்கு படித்து பார்த்தேன். அதனால்தான் சாட்சி கையெழுத்திட்ட நபர்கள் குடும்பத்திற்கு சம்பந்தமற்ற நபர்கள் என்று கூறுகிறேன் நான் கூறுவது பொய் என்றும் எனக்கு உயில் பற்றிய விவரங்கள் முன்னதாகவே நன்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் முன்னுக்குபின் முரணாக

கூறுவதால் எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்றால் சரியல்ல. சாட்சியமளிக்க வரும் முன்பாகவே என்னிடம் வாதி உயில் ஆவண நகலை கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார் என்றால் சரியல்ல. 10, 11 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தந்தைக்கு சேர்த்து மொத்தம் மூன்று வீடுகள் உள்ளது. வாதிக்கு ஒரே மகன்தான். அவர் திருமணமாகி தனிக்குடித்தனம் செய்து வருகிறார். வாதி கணவரைப் பிரிந்து கைக்குழந்தையுடன் பெற்றோர் வீட்டிற்கு வந்தபின்னர் அவரையும் அவரது மகனையும் 1ம் பிரதிவாதியும் அவரது பெற்றோரும் பாதுகாத்து பராமரித்தனர் என்றால் சரிதான். வாதியும் பெற்றோரின் விவசாய நிலங்களில் வேலை பார்த்தார். வாதியின் தந்தை வாதிக்கு ஏதேனும் சொத்துக்கள் எழுதித்தர வேண்டுமென்று கூறி வந்தார். அந்த முறையில்தான் சுப்பிரமணியன் உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தின் முலமாக வாதிக்கு சொத்துக்கள் கொடுத்துள்ளார். உயில் மூலம் வாதிக்கு சொத்துக்கள் எழுதி வைத்த விவரத்தை சுப்பிரமணியன் முன்னதாகவே என்னிடம் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் வாதிக்கும் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அதனால்தான் அதை படிக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு அவரது தந்தை சொத்துக்களை ஒதுக்கிய போதிலும் அவரது வாழ்க்கையையும் முழுமையாக பராமரித்த பின்னரும் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்துடனும் 1ம் பிரதிவாதியிடமிருந்து முறையான ஆவணங்கள் மூலம் எழுதிப் பெற்ற நல்லெண்ண கிரையதாரர்களான 10.,11 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க

வேண்டுமென்ற நோக்கத்துடன் வாதி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நானும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த விவரங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றும் அதை வேண்டுமென்றே மறைத்து சாட்சியமளிப்பதால் எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.14 17:07:07 +0530